**பொது நிதி முகாமைத்துவத்தை வலுவூட்டும் செயற்றிட்டம் (e – GP செயலகம்) - 2025**

----------------------------------------------------------------------------------------------------------------

பொது நிதி முகாமைத்துவத்தினை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின் **(e–GP செயலகம்) ("செயற்றிட்டம்")** 2025 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கம் ஆகியவற்றுக்கிடையே 2023 யூன் 30 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட ரிஎப்0சி1642 (TF0C1642) ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் எல்கே பிஎப்எம் (LK PFM) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்தரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

**1.2 செயற்றிட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயற்றிட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் பொது நிதித்திணைக்களம் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. பெறுகையில் நிறுவனத்தின் இயலுமை மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல் என்பன இச் செயற்றிட்டத்தின் குறிக்கோள்களாகும். மானிய உடன்படிக்கையின் பிரகாரம் செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா. 1,200 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 4 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்றிட்டத்தின் நடவடிக்கைகள் 2023 யூன் 7 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2026 நவம்பர் 30 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்றிட்டத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களுற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்றிட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்றிட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களுக்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதி செயல்திறன்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி II இன் 1.4 மற்றும் 1.5 ஆகிய பிரிவுகளின் கீழான 09 ஆம் இலக்க வழிகாட்டலின் பிரகாரம் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்க வேண்டிய, அரச வங்கியொன்றில் செயல் திட்டத்தினால் பேணப்பட்ட முற்கொடுப்பனவு அட்டைக் கணக்கிலுள்ள 2025 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான ரூபா. 58,250 மீதியானது அவ்வாறு மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | அதில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் தேவைகளுக்கு இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதி ஒழுங்குவிதி 257 இன் பிரகாரம், கொடுப்பனவுக்காகக் கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அனைத்துப் பற்றுச்சீட்டுகளும் உரியவாறு அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், ரூபா. 567,749 மொத்தப் பெறுமதியைக் கொண்ட 6 பற்றுச்சீட்டுகளில் அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | அதில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | நிதி ஒழுங்குவிதி 257 இன் பிரகாரம் அனைத்துக் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுகளும் உரியவாறு அத்தாட்சிப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | நிதி ஒழுங்குவிதி 262(2) இன் பிரகாரம், கொடுப்பனவு செய்யப்பட்ட அனைத்துப் பற்றுச்சீட்டுகளும் அவற்றின் துணை ஆவணங்களும் ''செலுத்தப்பட்டது'' என முத்திரையிடப்படல் வேண்டும் என்பதுடன், காசுப் புத்தகத்தில் பதியப்பட்ட கொடுப்பனவுத் திகதியும் அம் முத்திரையில் குறிப்பிடப்படல் வேண்டும். இருப்பினும், 2025 சனவரி மாதத்திற்கான பற்றுச்சீட்டுக் கோப்பினைப் பரிசீலனை செய்தபோது, 250116 மற்றும் 250103 ஆம் இலக்கப் பற்றுச்சீட்டுகள் தவிர்ந்த, ரூபா. 1,839,316 மொத்தப் பெறுமதியைக் கொண்ட ஏனைய 18 பற்றுச்சீட்டுகளுடன் இணைக்கப்பட்ட துணை ஆவணங்களில் | அதில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | நிதி ஒழுங்குவிதி 262(2) இன் பிரகாரம், செலுத்தப்பட்ட அனைத்துப் பற்றுச்சீட்டுகளும் அவற்றின் துணை ஆவணங்களும் ''செலுத்தப்பட்டது'' என முத்திரையிடப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

“செலுத்தப்பட்டது” என முத்திரையிடப்பட்டிருக்கவில்லை என்பது தெரியவந்தது.

## 2.2 செயற்றிட்டத்தின் நிதிப்பயன்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக இத் திட்டத்திற்கென உள்நாட்டு நிதிகளின் கீழ் ரூபா. 10 மில்லியன் மற்றும் வெளிநாட்டு நிதிகளின் கீழ் ரூபா. 400 மில்லியன் தொகையிலான ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், மீளாய்வாண்டின் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி ஒதுக்கீடுகளிலிருந்து முறையே ரூபா. 162,000 மற்றும் ரூபா. 103,144,498 மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன. இதன் விளைவாக, ஆண்டின் இறுதியில் உள்நாட்டு நிதிகளின் கீழ் ரூபா. 9,838,000 (98 சதவீதம்) மற்றும் வெளிநாட்டு நிதிகளின் கீழ் ரூபா. 296,855,502 (74 சதவீதம்) கொண்ட பயன்படுத்தப்படாத மீதிகள் எஞ்சியிருந்தமையானது, ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் குறிப்பிடத்தக்களவில் குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டுகின்றது. | மேம்படுத்தப்பட்ட இலத்திரனியல் அரச பெறுகை (e-GP) முறைமையினை விருத்திசெய்து அமுலப்படுத்துவதே இச் செயற்றிட்டத்தின் பிரதான மைல்கல்லாக அமைந்திருந்தது. இருப்பினும், முன்னைய முறைமை அமுலாக்கல் பங்காளரினால் (SIP) ஏற்பட்ட தாமதங்கள், திட்டமிடப்பட்ட பெறுபேறுகள் அடையப்பெறுவதை தடுத்ததுடன், அது SIP இன் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதற்கும் ஆரம்ப அமுலாக்கல் காலப்பகுதிக்குள் திட்டத்தை நிறைவுசெய்வதில் தாமதங்கள் ஏற்படுவதற்கும் இட்டுச்சென்றது. எஞ்சியுள்ள செயற்பாடுகளை நிறைவுசெய்வதற்கும் உத்தேசிக்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்கும், செயற்றிட்ட அமுலாக்கல் காலப்பகுதியை இரண்டு வருடங்களுக்கு நீடிப்பதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. கால நீடிப்புத் தொடர்பான கலந்துரையாடல்கள் ஐரோப்பிய ஒன்றியம், உலக வங்கி, வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் ஏனைய தொடர்புடைய பங்குதாரர்களுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அங்கீகாரத்திற்கு உட்பட்டு, நீடிக்கப்பட்ட காலப்பகுதியின் போது ஒதுக்கப்பட்ட நிதிகளின் வினைத்திறனான பயன்பாட்டையும் எஞ்சியுள்ள செயற்பாடுகள் உரிய காலத்தில் நிறைவுசெய்யப்படுவதையும் அரச நிதித் திணைக்களம் (PFD) / e-GP தொடர்ந்தும் உறுதிப்படுத்தும். | செயற்ட்டத்தை உரிய காலத்தில் நிறைவு செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டம் வினைத்திறனாகப் பயன்படுத்தப் படுவதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்றிட்டத்தின் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | e-GP முறைமையை அபிவிருத்திசெய்வதற்காக ரூபா. 71,500,000 கிரயத்தில் உத்தரவாதமளிக்கப்பட்ட கம்பனியொன்றுடன் (SIP) 2019 நவம்பர் 25 அன்று முதன்மை உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தக்காரர் திருப்திகரமான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறிருந்தும், முறைமையின் புதிய பதிப்புக்களை விருத்திசெய்வதற்காக, மொத்த ஒப்பந்தப் பெறுமதியை ரூபா. 152,870,000 ஆக உயர்த்தி, 20 மாத காலப்பகுதிக்குள் முறைமையை அபிவிருத்தி செய்வதற்கென்று அதே கம்பனியுடன் 2023 மார்ச் 22 அன்று மூல ஒப்பந்தத்திற்கான பிற்சேர்க்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. மேலும், முறைமை அபிவிருத்தியாளரினால் ஒப்பந்தக் கடப்பாடுகள் பல சந்தர்ப்பங்களில் நிறைவேற்றப்படாமை, e-GP தொகுதிகளைக் (modules) கையளிப்பதில் ஏற்பட்ட தொடர்ச்சியான கால தாமதங்கள், கடிதப் பரிமாற்றங்களுக்குப் பதிலளிக்கத் தவறியமை மற்றும் கோரப்பட்ட வெளிப்பாடுகளை வழங்கத் தவறியமை ஆகியவற்றின் காரணமாக, அரச நிதித் திணைக்களமானது 2025 ஆகஸ்ட் 29 அன்று முறைமை அபிவிருத்தியாளருடனான ஒப்பந்தத்தை இரத்துச் செய்திருந்தது. அதன்பின்னர், புதிய முறைமை அபிவிருத்திக் கம்பனியொன்றை ஈடுபடுத்துவதற்காக 2026 ஆம் ஆண்டில் விலைமனு கோரப்பட்டிருந்தது. ஆரம்ப ஒப்பந்ததாரரின் செயல்பாடு | அதில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். செயற்றிட்ட அபிவிருத்தி நோக்கங்களை (PDOs) அடைந்துகொள்வதற்காக, திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை உரிய காலத்தில் அமுல்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதை PFD/ e-GP உறுதி செய்யும். இது தொடர்பில், உத்தேசிக்கப்பட்ட செயற்றிட்டப் பெறுபேறுகளை அடைந்துகொள்வதையும் மீதமாகவுள்ள செயற்பாடுகளை வெற்றிகரமாக அமுல்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட தந்திரோபாய திட்டமொன்றை அபிவிருத்திசெய்வதற்காக, PFD/ e-GP ஆனது உலக வங்கியுடன் கலந்தாலோசித்து விரிவான மதிப்பீடொன்றை மேற்கொண்டு வருகின்றது. | அதன் உத்தேசிக்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திருப்தியற்றதாக இருந்தபோதிலும், அவருடன் கூடுதல் ஒப்பந்தம் கையெழுத்திடுவதற்கு முன்னதாக ஒரு புதிய ஒப்பந்ததாரரைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பது கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | e-GP முறைமையை அபிவிருத்தி செய்வதற்காகப் புதிய முறைமை அபிவிருத்தியாளர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பெறுகை செயன்முறையானது 2025 நவம்பர் 25 அன்று ஆரம்பிக்கப்பட்டதுடன், அவ்வாட்சேர்ப்பானது 2026 யூலை 08 இற்குள் நிறைவுசெய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. 2026 ஆகஸ்ட் 20 ஆம் திகதியில் உள்ளவாறு, அப்பெறுகை செயன்முறையானது 1 மாதம் 12 நாட்கள் காலதாமதத்துடன் முன்னெடுக்கப் பட்டுக்கொண்டிருந்தது. | தற்போதைய நிலையில், முன்மொழிவுகளுக்கான கோரிக்கையானது நிறைவு செய்யப்பட்டுள்ளது மற்றும் பெறுகையானது தற்போது முன்மொழிவுகளை மதிப்பீடு செய்யும் கட்டத்தில் உள்ளது. 2026 ஆகஸ்ட் மாத இறுதிக்குள் பெறுகை செயன்முறையினை நிறைவுசெய்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | அதன் நோக்கங்களை விரைவில் அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | e-GP முறைமையின் 3 ஆம் பதிப்பானது செல்லுபடித்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக சுயாதீனமான மூன்றாம் தரப்புச் நிறுவனமொன்றிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அம்முறைமையின் 3 ஆம் பதிப்பானது தொழிற்பாட்டு மட்டத்திற்கென அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை என்று அச்சுயாதீன சரிபார்ப்பாளர் உறுதிப்படுத்தியிருந்தார் என்பது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது குறித்த நிறுவனத்திற்கு ரூபா. 4,398,538 கொண்ட மொத்தக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | செயற்றிட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்கும் எஞ்சியுள்ள செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்குமான தந்திரோபாயத் திட்டமொன்றை அபிவிருத்திசெய்வதற்காக, PFD/ e-GP ஆனது உலக வங்கியுடன் கலந்தாலோசித்து விரிவான மதிப்பீட்டொன்றை மேற்கொண்டு வருகின்றது. இம்மதிப்பீடானது நிலுவையிலுள்ள பணிகளைக் கண்டறிவதுடன், அப்பணிகளை உள் ஊழியர்களைக் கொண்டு மேற்கொள்வதா அல்லது வெளிப்பணிக்கமர்த்தல் மூலம் மேற்கொள்வதா | முறைமை அபிவிருத்தி மைல்கற்கள் உடன்பட்டவாறு எட்டப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக, செயற்றித்திட்டக் கண்காணிப்பு மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் வலுப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | என்பதையும் தீர்மானிக்கும். | |
| (ஈ) | 2026 யூலை 31 ஆம் திகதியிலுள்ளவாறு, SLT Rainbow Pages நிறுவனமானது 1,350 வழங்குநர்கள் தொடர்பான தகவலகளை e-GP செயலகத்திற்கு வழங்கியிருந்தது. PFD இனால் இவ்வழங்குநர்கள் அனைவரும் e-GP முறைமை தொடர்பாக விழிப்புணர்வூட்டப்பட்டிருந்த போதிலும், 53 வழங்குநர்கள் மாத்திரமே e-GP முறைமையில் பதிவுசெய்திருந்தனர். மேலும், பதிவுசெய்த வழங்குநர்களினால் பதிலளிக்கப்படாமை மற்றும் தொடர்பான தொழிற்பாட்டு வரையறைகள் போன்ற பிரச்சனைகள் காரணமாக, பதிவுசெய்யப்பட்ட 942 அரசாங்க நிறுவனங்களில் 324 நிறுவனங்கள் மாத்திரமே e-GP முறைமையினூடாகத் தங்களது பெறுகை செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தன. | SLT Rainbow பக்கங்களில் (Pages) இனங்காணப்பட்ட பெரும்பாலான வழங்குநர்கள், பொருட்கள் வழங்குநர்களாக அன்றி சேவை வழங்குநர்களாகவே காணப்பட்டனர். வாரமொன்றுக்கு 250 வழங்குநர்கள் பற்றிய தகவல்களை வழங்குவதற்கு SLT Rainbow Pages உடன்பட்டிருந்த போதிலும், 100 இற்கும் குறைவான வழங்குநர்களின் விபரங்களே வழங்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு இனங்காணப்பட்ட வழங்குநர்களில் சிலர் ஏற்கனவே e-GP முறைமையில் பதிவுசெய்யப்பட்டிருந்தனர். promise.lk முறைமையில் 942 அரச நிறுவனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ள போதிலும், 324 நிறுவனங்கள் மாத்திரமே e-GP முறைமையினூடாகச் செயற்பாட்டுரீதியாக இலத்திரனியல் பெறுகை செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. | செயற்றிட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | e-GP முறைமை மீதான "ஆலோசகரின் பின்னூட்டல் மற்றும் தந்திரோபாய வழிகாட்டலுக்கான கோரிக்கை" தொடர்பான அறிக்கையின் பிரகாரம் மற்றும் 2025 யூலை 16 அன்று நடைபெற்ற வழிநடாத்தல் குழுவின் VI ஆவது கூட்டத்தில் உலக வங்கிப் பணிக்குழு அறிக்கையில் கலந்துரையாடப்பட்ட குறிப்பிட்ட விடயங்களின் பிரகாரம், e-GP முறைமையை அபிவிருத்தி | PFD/ e-GP ஆனது புதிய SIP இன் செயலாற்றுகையை உன்னிப்பாகக் கண்காணிப்பதுடன், அமுலாக்கக் காலப்பகுதி முழுவதும் ஒப்பந்தத் தேவைகளுக்கு அமைவாக வளங்கள் ஈடுபடுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். | அங்கீகரிக்கப்பட்ட மனிதவளத் திட்டத்திற்கு அமைவாக முறைமை அபிவிருத்தியாளர் தேவையான எண்ணிக்கையான தகைமை வாய்ந்த பணியாளர்களை ஈடுபடுத்துவதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன், |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்காகப் போதுமான எண்ணிக்கையான முறைமை அபிவிருத்திப் பணியாளர்களை முறைமை அபிவிருத்தியாளர் ஈடுபடுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும், அங்கீகரிக்கப்பட்ட மனிதவளத் திட்டத்திற்கு அமைவாக முறைமை அபிவிருத்திக்கென உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கும் அரச நிதித் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், அந்நிலைமையானது திருப்திகரமாகச் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. | | ஏதேனும் இணங்காமைகளுக் குத் தீர்வு காண்பதற்கு ஒப்பந்த ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (ஊ) | பொதுவான ஒப்பந்த நிபந்தனைகளின் ‘‘நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்’’ தொடர்பான 3.8.1 ஆம் வாசகத்தின் பிரகாரம், காலதாமதங்களுக்காக சம்பந்தப்பட்ட ஸ்பிரின்ட்டிற்குரிய கொடுப்பனவில் நாளொன்றுக்கு 0.07142 சதவீதம் என்ற வீதத்தில் முறைமை அபிவிருத்தியாளரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டு கொடுப்பனவு அறவிடப்படல் வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. e-GP முறைமை அபிவிருத்தித் திட்டத்தின் ஸ்பிரின்ட் 01 மற்றும் ஸ்பிரின்ட் 02 என்பன 2023 செப்தெம்பர் 30 இற்குள் நிறைவுசெய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவை 2024 ஆம் ஆண்டின் போதே நிறைவுசெய்யப்பட்டிருந்தன. இருப்பினும், 2025 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு, இத்தாமதங்கள் தொடர்பில் முறைமை அபிவிருத்தியாளரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு அமைவாக ஏற்புடைய நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 2023 ஆம் ஆண்டில் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியளிப்பு மூலங்கள் இரண்டிலிருந்தும் ரூபா. 204,808,125 கொண்ட மொத்தச் செலவில், கொள்முதல் பெறுகை முறையின் கீழ் மாத்திரமே இலத்திரனியல் பெறுகை செயற்பாடுகளை வசதிப்படுத்துவதற்காக e-GP முறைமையானது அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், ஏனைய பெறுகை முறைகளுக்கும் இதனை விரிவாக்குவதன் மூலம் பொதுப் பெறுகை செயன்முறைகளில் நிறுவனப்பெறுகை மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதான தனது உத்தேசிக்கப்பட்ட நோக்கத்தினை அடைந்துகொள்வதற்கு இச்செயற்றிட்டம் தவறியிருந்தது. | முன்னைய SIP இனால் ஏற்பட்ட தொடர்ச்சியான தாமதங்கள் காரணமாக, திட்டமிடப்பட்ட பெறுபேறுகளை அடைந்துகொள்ள முடியவில்லை. இதன் விளைவாக, முன்னைய SIP உடனான ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, எஞ்சியுள்ள e-GP தொகுதிகளை அபிவிருத்தி செய்வதைப் பொறுப்பேற்பதற்குப் புதிய SIP ஒருவரை இணைத்துக் கொள்வதற்காக PFD/ e-GP செயற்றிட்டமானது பெறுகை செயன்முறையை ஆரம்பித்துள்ளதுடன், தேவையான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. புதிய ஒப்பந்தத்தின் அமுலாக்கத்தை PFD/ e-GP ஆனது உன்னிப்பாகக் கண்காணிப்பதுடன், e-GP முறைமையானது காலத்திற்கேற்ப அபிவிருத்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு விடுவதனை இது உறுதிப்படுத்தும். | இலத்திரனியல் பெறுகை செயன்முறையின் நன்மைகளை ஏனைய பெறுகை முறைகளிலும் உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | பொதுவான ஒப்பந்த நிபந்தனைகளின் கீழான பொது ஏற்பாடுகளின் 3.6 ஆம் வாசகத்தின் பிரகாரம், e-GP முறைமை தொடர்பான மென்பொருள் தேவைக் குறிப்பீட்டு (SRS) ஆவணங்கள், பிரயோக நிகழ்ச்சிநிரலாக்கல் இடைமுக (API) ஆவணப்படுத்தல், கையேடுகள், சோதனைச் சந்தர்ப்பங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களை அரச நிதித் திணைக்களத்திற்கு முறைமை அபிவிருத்தியாளர் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. இருப்பினும், இவ் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதில் காலதாமதங்கள் மற்றும் சமர்ப்பிக்காமை என்பன | இவ்விடயமானது முன்னைய SIP உடன் தொடர்புடையதாகும். பல்வேறு மன்றங்களில் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் விடுக்கப்பட்ட ஏராளமான கோரிக்கைகளுக்கு மத்தியிலும், மூல SRS இல் மேற்கொள்ளப்பட்ட அனைத்து அடுத்தடுத்த திருத்தங்களையும் உள்ளடக்கிய இற்றைப்படுத்தப்பட்ட பதிப்பொன்றைச் சமர்ப்பிக்குமாறு முன்னைய SIP இற்கு மீண்டும் மீண்டும் கோரப்பட்டிருந்தது. இருப்பினும், | அனைத்து முறைமை ஆவணங்களையும் உரிய காலத்தில் சமர்ப்பிப்பதைக் கோரும் ஒப்பந்த ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டிருந்தன. மேலும், பின்னிணைப்பு A.1 இன் பிரகாரம், ஒவ்வொரு ஸ்பிரின்ட்டிற்கும் உரித்தான SRS ஆவணங்களினை சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. இருப்பினும், இவ் ஆவணங்கள் அரச நிதித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அதனால் மூன்றாம் தரப்பினரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சோதனைச் செயற்பாடுகளுக்குத் தடை ஏற்பட்டிருந்தது. | இக்கோரிக்கைகள் தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட போதிலும், நாளதுவரையாக்கல் செய்யப்பட்ட SRS இனை வழங்குவதற்கு முன்னைய SIP தவறியிருந்தது. இத்தோல்வியானது குறிப்பிடத்தக்கதொரு ஒப்பந்த இணங்காமையாகக் கருதப்பட்டதுடன், ஒப்பந்தம் முடிவுறுத்தப்படுவதற்கு வழிவகுத்த காரணிகளில் ஒன்றாகவும் அமைந்திருந்தது. | |
| (ஐ) | முறைமையின் 2.1 ஆம் பதிப்பானது SriLanka Telecom இன் சேவையக வசதிகளில் தொழிற்படுத்தப்பட்டு வந்தது. இருப்பினும், புதிய முகில்சார் உட்கட்டமைப்புக்கு (cloud infrastructure) முறைமையை இடப்பெயர்வு செய்தலானது 2025 திசெம்பர் 31 ஆம் திகதியிலும் கூட மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அதில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | முறைமையின் உறுதித்தன்மை, பாதுகாப்பு மற்றும் வினைத்திறன் ஆகியவற்றை உறுதி செய்வதற்கு, உரிய கண்காணிப்புடன் கூடிய கட்டமைக்கப்பட்ட இடப்பெயர்வுத் திட்டமொன்றை விரைவு படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |